Tamil | தமிழ்

# விக்டோரிய மாநில மார்பகப் புற்று சோதனை தகவல் ஏடு

BreastScreen Victoria

Caring about Women

| சோதனைக்கு முன்பாக | சோதனையின் போது | சோதனைக்குப் பின்பு | இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு |
|---|---|---|---|
|  |  |  |  |
| மார்பகப் புற்று அல்லது கருக்கொடிப் புற்று ஆகியவை குறித்த **குடும்ப வரலாற்றினைப்** பற்றி உங்கள் குடும்பத்தாருடன் பேசுங்கள்.<br>இணைய வழியாக அல்லது காகிதப் படிவம் மூலமாக உங்களுடைய **'பதிவுப் படிவ' (registration form)** த்தினைப் பூர்த்தி செய்யுங்கள்.<br>**கால்சட்டை அல்லது பாவாடையோடு மேல்சட்டை** ஒன்றை அணிந்துசெல்லுங்கள்.<br>மார்பக அறிகுறிகள் ஏதும் இருந்தால் உங்களது மருத்துவரை **முதலில்** பாருங்கள். | என்ன செய்யப்படும் என்பதைப் பற்றி எமது பெண் ஊழியர்கள் விளக்கிச் சொல்வர்.<br>தனியானதொரு இடத்தில் உங்களுடைய மேல்சட்டையை நீக்குமாறு நீங்கள் கேட்கப்படுவீர்கள். **அங்கி** ஒன்று வேண்டுமானால், எம்மிடம் கேளுங்கள்.<br>பயன்படுத்தப்படும் சாதனம் இறுக்கமாக அழுத்திப் பிடிக்கும், ஆனால் இது வலி ஏற்படுத்தாமல் இருக்கவேண்டும்.<br>எவ்வொரு சமயத்திலும் மார்பகப் புற்றுச் சோதனையை நிறுத்துமாறு நீங்கள் கேட்கலாம். | 2-4 வாரங்களில் உங்களுடைய சோதனை முடிவுகள் உங்களுக்கு அனுப்பப்படும்.<br>மேலதிகமான சோதனைகள் தேவைப்பட்டால் உங்களுடன் தொடர்புகொள்வோம்.<br>மேலதிக சோதனைகளுக்காக அழைக்கப்படும் பெண்களில் பெரும்பான்மையானோருக்கு மார்பகப் புற்று **இருப்பதில்லை**. | பெரும்பாலான் பெண்கள் 2 ஆண்டுகளுக்குப் பிறகு திரும்பி வருமாறு அழைக்கப்படுவர்.<br>மார்பகப்புற்று சோதனைகளுக்கு இடைப்பட்ட காலத்தில் **அறிகுறிகள்** எதுவும் தென்பட்டால், உங்களுடைய மருத்துவரைப் பாருங்கள். |

## சோதனைக்கு முன்பாக

### BreastScreen Victoria'-வைப் பற்றிய தகவல்கள்

40 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதையுடைய பெண்களுக்கு இலவச மார்பகப் புற்றுநோய்ச் சோதனைகளை BreastScreen Victoria எனும் சேவை அளிக்கிறது. விக்டோரிய மாநிலத்தில் மார்பகப் புற்றுச் சோதனைகளை அளிப்பதற்கு அரசாங்க மற்றும் தனியார் சுகாதார சேவைகளை BreastScreen Victoria ஒப்பந்தப்படுத்தியுள்ளது. BreastScreen Victoria-வானது மார்பகப் புற்றுச் சோதனைகளை தேசிய அளவில் அளிக்கும் BreastScreen Australia எனும் அமைப்பின் அங்கமாகும்.

### மார்பகப் புற்றுச் சோதனை என்பது என்ன?

மார்பகத்தினை கதிர்வீச்சுப்படம் எடுப்பது மார்பகப் புற்றுச் சோதனை எனப்படுகிறது ('மேமொக்ராம்' என்றும் இது சொல்லப்படுகிறது). பார்க்க, அல்லது தொட்டுப் பார்த்து உணர இயலாத அளவிற்கு மிகச் சிறிய அளவில் உள்ள புற்றுகளை மார்பகக் கதிர்வீச்சுப் படங்களால் கண்டுபிடிக்க இயலும். மார்பகப் புற்றினை எவ்வளவு முன்னதாகக் கண்டுபிடிக்கிறோமோ அந்த அளவிற்கு நேர்முகமானதொரு பலனைப் பெறும் வாய்ப்பு இருக்கும்.

### மார்பகத்தில் ஏதாவது மாற்றங்கள் அல்லது அறிகுறிகள் இருந்தால் என்ன செய்வது?

கட்டி, வலி அல்லது மார்பகக் காம்பிலிருந்து கசிவு எதனையும் நீங்கள் அவதானித்தால், BreastScreen Victoria -வில் உங்களது **சந்திப்புவேளைக்கு வருவதற்கு முன்பாக** கூடிய விரைவில் உங்களது மருத்துவரை நீங்கள் பார்க்கவேண்டியது முக்கியம்.

### மார்பகப் புற்றுச் சோதனைகள் பாதுகாப்பானவையா?

ஒவ்வொரு முறையும் நீங்கள் மார்பகப் புற்றுச் சோதனையை மேற்கொள்ளும்போது மிகச் சிறு அளவிலான கதிர்வீச்சத்திற்கு நீங்கள் ஆளாவீர்கள். கதிர்வீச்சத்தினால் ஏற்படும் எவ்வொரு ஆபத்தையும் விட முன்னதாகவே புற்றுநோயைக் கண்டுபிடிக்க மார்பகப் புற்று சோதனையை மேற்கொள்வதால் கிடைக்கும் பலன்கள் அதிகம் என்று ஆய்வுகள் காண்பிக்கின்றன.

### உங்களது மார்பகக் கதிர்வீச்சுப் படங்களைப் பெறுதல்

உங்களுடைய முந்தைய மார்பகக் கதிர்வீச்சுப் படங்களை ஒப்பிட்டுப் பார்ப்பது இப்போதைய சோதனை முடிவுகளின் துல்லியத் தன்மையினை அதிகரிக்கும். உங்களுடைய சந்திப்புவேளைக்கான முன்பதிவினை நீங்கள் செய்தபோது உங்களுடைய கடைசி மார்பகப் புற்று சோதனைப் படமானது BreastScreen Victoria -திட்டத்திற்கு அப்பாற்பட்டு வெளியே எடுக்கப்பட்டதா என்று உங்களைக் கேட்டோம். நீங்கள் சம்மதித்தால், இப் படங்களை மின்-தொடர்பு மூலமாக எங்களால் பெற இயலும் என்றும் கூறினோம். இல்லையெனில் உங்களுடைய சந்திப்புவேளைக்கு நீங்கள் வரும்போது உங்களுடைய மார்பகக் கதிர்வீச்சுப் படங்களைக் கொண்டுவருமாறு உங்களைக் கேட்டுக்கொண்டோம்.

### குடும்ப வரலாறு

பெண்களுக்கு இன்னும் சிறந்த கவனிப்பை அளிக்க இயலவேண்டும் என்பதற்காக, மார்பகப் புற்று அல்லது கருக்கொடிப் புற்று (ovarian cancer) ஆகியவை குறித்த பெண்களது குடும்ப வரலாற்றினைப் பற்றிய தகவல்களை BreastScreen Victoria சேகரிக்கிறது. மார்பகப் புற்று உருவாவதற்கான ஆபத்து ஒருவருக்கு எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை மதிப்பிட BreastScreen Victoria இந்தத் தகவல்களைப் பாவிக்கிறது. உங்களுடைய பதிவுப் படிவத்தினை நிரப்புவதற்கு முன்பாக, உங்களுடைய குடும்ப வரலாற்றினைப் பற்றி உங்களது குடும்பத்தாருடன் பேசுங்கள். மேலதிகத் தகவல்களுக்கு breastscreen.org.au/familyhistory எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

### எனது மார்பகத்தில் 'பதியங்கள்' (implants) இருந்தால் என்ன செய்வது?

மார்பகப் பதியங்கள் உள்ள பெரும்பாலான பெண்களால் மார்பகப் புற்றுச் சோதனைகளை மேற்கொள்ள இயலும். Breast screening for women with implants (பதியங்கள் உள்ள பெண்களுக்கான மார்பகப் புற்றுச் சோதனை) என்ற தலைப்பினைக் கொண்ட தகவல் ஏட்டினை வாசியுங்கள். நீங்கள் பார்க்க வேண்டிய வலைத்தளம்: breastscreen.org.au/BreastScreening/The-Facts அல்லது அச்சிடப்பட்ட தாள்கள் மருத்துவப் பரிசோதனை மனைகளில் கிடைக்கும்.

அடுத்த பக்கம் பாருங்கள்

### சந்திப்புவேளையின்போது நான் எப்படிப்பட்ட ஆடைகள் அணிந்து செல்ல வேண்டும்?

சோதனைக்காக உங்களுடைய மேல் சட்டையை மட்டும் கழற்றும் விதத்தில், பாவாடை அல்லது தளர்கால்சட்டை மற்றும் ஒரு மேல்சட்டை ஆகியவற்றை அணிந்து செல்லுங்கள்.

## சோதனையின் போது

### எனது சந்திப்புவேளையின்போது என்ன நடக்கும்?

மருந்தகத்தில் என்ன நடக்கும் என்பதை விளக்கிச் சொல்லக்கூடிய BreastScreen Victoria பணியாளர் ஒருவர் உங்களை வரவேற்பார். பெண் கதிர்வீச்சுப் படமெடுப்பாளர் ஒருவர் உங்களை சோதனை அறைக்குள் அழைத்துச் செல்வார். அங்கி ஒன்றை அணிந்துகொள்ள வேண்டுமெனில் தயவு செய்து எம்மைக் கேளுங்கள். நீங்கள் ஆயத்தமான பிறகு, குறைந்தபட்சமாக உங்களுடைய ஒவ்வொரு மார்பகத்தின் இரு படங்களைக் கதிர்வீச்சுப் படமெடுப்பாளர் எடுப்பார்.

### கதிர்வீச்சுப் படப்பிடிப்பாளருடன் நான் பேசலாமா?

ஆம், குறிப்பாக உங்களுக்குக் கரிசனங்கள் ஏதும் இருந்தால், உங்களது கதிர்வீச்சுப் படப்பிடிப்பாளருடன் நீங்கள் தொடர்பாடல் கொள்ளவேண்டியது முக்கியம். உங்களுக்குக் கேள்விகள் ஏதுமிருந்தால், அவர்கள் தாராளமாகப் பதிலளிப்பர்.

### இது வலி ஏற்படுத்துமா?

மார்பகப் புற்றுச் சோதனையின் போது அசௌகரியமான உணர்வு ஏற்படுவது பொதுவானது, மற்றும் இது சில வினாடி நேரத்திற்கே நீடிக்க வேண்டும். ஏனெனில், எடுக்கப்படும் படம் தெளிவானதாக இருக்கவேண்டும் என்பதற்காக சோதனை இயந்திரத்திலுள்ள இரண்டு தகடுகளுக்கிடையே உங்களுடைய மார்பகங்கள் அழுத்திப் பிடிக்கப்படவேண்டும். உங்களுக்கு ஏதும் வலி ஏற்பட்டால், உங்களது கதிர்வீச்சுப் படப்பிடிப்பாளருக்கு இதைத் தெரிவியுங்கள். **எவ்வொரு நேரத்திலும் மார்பகப் புற்றுச் சோதனையை நிறுத்துமாறு நீங்கள் உங்களது கதிர்வீச்சுப் படப்பிடிப்பாளரைக் கேட்கலாம்.**

### உங்களுடைய மார்பகங்களை அழுத்த வேண்டிய தேவை எமக்கு இருக்குமா?

ஆம், ஆனால் மிக முக்கியமான காரணங்களுக்காக மட்டுமே. அழுத்திப் பிடிப்பதால் மார்பகங்கள் நிலையாக இருக்கும், மற்றும் இது மார்பகத் திசுக்களைத் தனிப்படுத்திக் காட்டும், ஆகவே எம்மால் தெளிவான மார்பகக் கதிர்வீச்சுப் படத்தைப் பெற இயலும்.

## சோதனைக்குப் பின்பு

### சோதனை முடிவுகள் எப்போது கிடைக்கும்?

சிறப்புப் பயிற்சி பெற்ற இன்னும் இரண்டு சுயாதீன சுகாதாரத் தொழிலர்களால் உங்களுடைய மார்பகக் கதிர்வீச்சுப் படம் பரிசோதிக்கப்படும். 2 - 4 வாரங்களுக்குள்ளாக உங்களது சோதனை முடிவுகள் உங்களுக்கு அனுப்பப்படும். உங்களுடைய மருத்துவருடைய விபரங்களை நீங்கள் கொடுத்திருந்தால், அவருக்கும் உங்களுடைய சோதனை முடிவுகள் அனுப்பப்படும்.

### மேலதிக சோதனைகளுக்காகத் திரும்பி வருமாறு நான் அழைக்கப்பட்டால் என்ன செய்வது?

சில தருணங்களில், மேலதிக சோதனைகளுக்காக மார்பகப் புற்று சோதனைக்குத் திரும்ப வருமாறு பெண்கள் கேட்டுக்கொள்ளப்படுவர். மார்பகப் புற்று இருக்கிறது என்பது இதன் அர்த்தமல்ல, ஆனால் உறுதிப்படுத்துவதற்காக சில வேளைகளில் மேலதிக சோதனைகள் தேவைப்படும். முதல் முறையாக மார்பகப் புற்றுச் சோதனைகளைச் செய்துகொள்ளும் பெண்களுக்கு இப்படி அடிக்கடி ஏற்படும். ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு வேறு மார்பகக் கதிர்வீச்சுப் படங்கள் இல்லாமலிருப்பதே இதற்குப் பொதுவான காரணமாகும். மேலதிக சோதனைகளுக்காகத் திரும்ப வருமாறு அழைக்கப்படும் பெரும்பான்மையன பெண்களுக்கு மார்பகப் புற்று இருப்பதில்லை.

### மார்பகப் புற்று சோதனை அனைத்துப் புற்றுகளையும் கண்டுபிடித்துவிடுமா?

புற்றுநோயை முன்னதாகவேக் கண்டுபிடிக்க மார்பகக் கதிர்வீச்சுப்படங்கள் மிகச் சிறந்த வழியாகும், இருந்தாலும், இவை 100 சதவீதம் துல்லியமானவையல்ல. மார்பகப் புற்று ஒன்று இருக்கும்போது கூட சோதனைக் கதிர்வீச்சுப்படம் சாதாரணமானதாகத் தோன்றக்கூடிய சிறு வாய்ப்பு உள்ளது.

## இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு

### எனது இரண்டாவது மார்பகப் புற்றுச் சோதனைக்கான நேரம் வரும்போது என்ன நடக்கும்?

இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மார்பகப் புற்றுச் சோதனையை மேற்கொள்வது மார்பகப் புற்றினை ஆரம்பத்திலேயே கண்டுபிடிப்பதற்கான சிறந்த வழியாகும். உங்களுடைய அடுத்த மார்பகப் புற்றுச் சோதனைக்கான நேரம் வரும்போது நினைவூட்டுக் கடிதம் ஒன்றை BreastScreen Victoria உங்களுக்கு அனுப்பும். 40-களிலான வயதிலுள்ள, மற்றும் 74-இற்கும் அப்பாற்பட்ட வயதுடைய பெண்கள் நினைவூட்டுக் கடிதங்களைப் பெற மாட்டார்கள், ஆனால் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை எம்முடன் சந்திப்புவேளைகளை ஏற்படுத்திக்கொள்ள இவர்களால் இயலும்.

### மார்பகப் புற்று சோதனைகளுக்கு இடைப்பட்ட காலத்தில் நான் என்ன செய்ய வேண்டும்?

இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நீங்கள் மார்பகப் புற்றுச் சோதனைகளைச் செய்துகொண்டாலும், 'மார்பக நல அவதானம்' உங்களுக்கு இருக்கவேண்டும், ஏனெனில், மார்பகப் புற்றானது எந்த நேரத்திலும் உருவாகக்கூடும். உங்களுடைய மார்பகங்கள் சாதாரணமாக எப்படித் தோன்றும், மற்றும் அவற்றைத் தொட்டுப் பார்க்கும்போது எப்படிப்பட்ட உணர்வு இருக்கும் என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்றும் மற்றும் கட்டிகள், வலி அல்லது மார்பகக் காம்புக் கசிவு போன்ற எவ்வொரு அசாதாரணமான மாற்றங்களை அவதானித்தால் நீங்கள் உடனடியாக உங்களுடைய மருத்துவரைப் பார்க்க வேண்டுமெனவும் நாங்கள் சிபார்சு செய்கிறோம்.

## உங்களுடைய அந்தரங்கத்தன்மை

மார்பகப் புற்று இருக்கிறதா என்று சோதிக்கவும், அடுத்த சோதனை எப்போது என்ற நினைவூட்டல் உள்ளடங்க பின் - தொடர் அறிவுரை வழங்கவும் நீங்கள் கொடுக்கும் தகவல்கள் மற்றும் உங்களுடைய சோதனை முடிவுகளை BreastScreen Victoria பயன்படுத்தும். அதிகாரமளிக்கப்பட்டுள்ள நபர்களால் மட்டுமே உங்களைப் பற்றிய தகவல்களை அணுக இயலும். உங்களுடைய சம்மதத்தோடு, அல்லது சட்டத்தினால் வேண்டப்படும்போது மட்டுமே உங்களை அடையாளம் காட்டக்கூடிய தகவல்களை நாங்கள் பயன்படுத்துவோம் அல்லது வெளிப்படுத்துவோம். நன்னெறி அங்கீகாரத்தோடு மட்டுமே ஆய்வுக் காரணங்களுக்காக உங்களைப் பற்றிய தகவல்களுக்கான அணுகல் அளிக்கப்படும். breastscreen.org.au/privacy எனும் வலைத் தலத்திற்குச் செல்லுங்கள்.

**எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்:** மின்னஞ்சல்: **info@breastscreen.org.au** அல்லது **13 20 50**-ஐ அழையுங்கள்.

**breastscreen.org.au** எனும் வலைத்தளம் வாயிலாக முன்பதிவு செய்யுங்கள் அல்லது **13 20 50**-ஐ அழையுங்கள்.

மேலதிகத் தகவல்களுக்கு, அல்லது உங்களைப் பற்றிய விபரங்களில் மாற்றம் ஏற்படுத்துவதற்கு **breastscreen.org.au** எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள், அல்லது **13 20 50**-ஐ அழையுங்கள்

மொழிபெயர்த்துரைப்பாளர் உதவிக்கு **13 14 50**-ஐ அழையுங்கள்

மொழிபெயர்க்கப்பட்ட தகவல்கள்: breastscreen.org.au/**translations**

செவிமடுப்பு அல்லது பேச்சுச் சிரமங்கள் உங்களுக்கு இருந்தால், **TTY 13 36 77**

விக்டோரிய அரசாங்கத்தின் ஆதரவுதவியை BreastScreen Victoria நன்றியோடு ஏற்றுக்கொள்கிறது.


© 2016 BreastScreen Victoria All Rights Reserved
FS10/1016
அடுத்த பக்கம் பாருங்கள்